24.01.2025

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 375 /2021

அ.சா.11

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பச்சையப்பன் | | |
| த/பெ | தேவராஜ் | | |
| கிராமம் | சிவபெருமான் பா யைளம் | தொழில் | |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 44/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது கொத்தனார் வேலை செய்து வருகிறேன். என் அப்பாவை தியாகராசு என்று அழைப்பார்கள். இந்த வழக்கில் இறந்துபோன ஐய்யப்பனை எனக்கு தெரியும். அவரது மனைவி அ.சா.ஆ. 1 நதியாவை எனக்கு தெரியும். எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். சக்கரபாணி மகன் பெரியசாமியை எனக்கு தெரியும். அனைவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். இந்த வழக்கில் ஐய்யப்பன் இறந்துவிட்ட அன்று அந்த பிரேதத்தை வைத்து விசாரித்து பிரேதத்தை பெற்றுக்கொள்ள அன்று காவல் நிலையத்தில் வைத்து விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் வைத்து போலீசார் என்னிடம் ஒரு கையொப்பம் வாங்கினார்கள். வேறு ஒன்றும் இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு தெரியாது. இந்த வழக்கின் எதிரிகளை விசாரித்த விவரமும் அவர்கள்

ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த விவரமும், எனக்கு தெரியாது. என்னை வேறு எங்கும் அழைத்து செல்லவில்லை. என் முன்னிலையில் எந்த பொருட்களும் கைப்பற்றப்படவும் இல்லை. என்னிடம் காட்டப்படும் 1, 2, 3 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையது தான். அது முறையே அ.சா.ஆ. 7, 8 ,9 ஆகும். கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள கையெழுத்துக்களில் 2ம் கையெழுத்து என்னுடையது தான். அவைகள் முறையே அ.சா.ஆ. 10, 11, 12, ஆகும். இது சம்மந்தமாக என்னை போலீசார் அதன் பிறகு விசாரணை செய்யவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 26/04/2021ந் தேதி மதியம் சுமார் 4 மணியளவில் எங்கள் ஊர் பெரியசாமியும் , நானும் பனையபுரம் நான்கு ரோட்டில் நின்று கொண்டிருந்தோம் என்றும், விக்கிரவாண்டி காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் எங்கள் ஊர் ஐய்யப்பன் கொலை செய்யப்பட்ட வழக்கு சம்மந்தமாக எங்கள் ஊர் சரத்குமார் , சரவணன், குமாரவேல், ஜானகி ஆகியோர்களை கைது செய்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், அவர்களில் 1 முதல் 3 எதிரிகள் எங்கள் முன்னிலையில் தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக்கொண்டார்கள் என்றும், அதை ஆய்வாளர் அவர்கள் தனித்தனியாக பதிவு செய்துக்கொண்டார்கள் என்றும், அதில் நானும், பெரியசாமியும் கையொப்பம் இட்டோம் என்றும், அதில் ஐய்யப்பனை திருக்கனூர் ஏரிக்கரைக்கு சென்று அழைத்து வந்த விவரம் குறித்தும் அவர்கள் அனைவரும் சேர்ந்து ஐய்யப்பனை

தாக்கிய விவரம் குறித்தும், சொல்லியிருந்தார்கள் என்றும், அன்று மாலை 5. 30 மணியளவில் 1ம் எதிரி சரத்குமார், ஐய்யப்பனை அடிக்க பயன்படுத்திய மரக்கட்டில் கால் மரக்கட்டையையும் இருசக்கரவாகனத்தையும் (PY05H1570) அவரது வீட்டின் பின்பு மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதை மகசரில் ஆய்வாளர் கைப்பற்றிக்கொண்டார் என்றும், 2ம் எதிரி சரவணன் பயன்படுத்திய இரும்பு ஸ்பேனரை அவரது வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருந்ததை மாலை 6 மணியளவில் எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதை ஆய்வாளர் மகசரில் கைப்பற்றிக்கொண்டார் என்றும், 3 ம் எதிரி குமரவேல் பயன்படுத்திய மரக்கட்டையை வாட்டர் டேங்க் பின்புறம் உள்ள வாழை தோப்பில் மறைத்து வைத்திருந்ததை மாலை சுமார் 6.30 மணியளவில் எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் அவர்கள் மகசரில் கைப்பற்றிக்கொண்டார்கள் என்றும், அ தில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் என் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பிரேதத்தை வாங்கும் போது ஒரே கையெழுத்து தான் போட்டேன். வேறு கையெழுத்தும் போடவில்லை.

**மறுவிசாரணை**

**இல்லை**